நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
மேட்டூர் நகராட்சி

**மேட்டூர் நகராட்சியின் அவசரக் கூட்டம் நகர்மன்றத்தில் நகராட்சியின் தனி அலுவலர் அவர்களால் 03.11.2020 ம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற உள்ளது.**

**மன்றப் பொருள்**

மேட்டூர் நகராட்சி பகுதியில் பாதாள சாக்கடை திட்டம் முடிவுற்ற பகுதிகளில் பழுதடைந்துள்ள சாலைகளை புதியதாக அமைப்பதற்கு சிறப்பு சாலை திட்டம் (Special Road Programme) **2020–2021**ம் ஆண்டின் கீழ் ரூ.**650.00** இலட்சம் மதிப்பீட்டில் கீழ்கண்ட விவரப்படி பணிகளை மேற்கொள்ள உரிய நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு பெற மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**பணியின் விபரம் பின்வருமாறு**

| வ.எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | சிப்பம் |
|---|---|---|---|
| 1 | மேட்டூர் நகராட்சி பாரதி நகர் ரோடு ,காமராஜர் நகர் குறுக்கு வீதி,காந்தி நகர் முதல் குறுக்கு வீதி மற்றும் முத்தாலம்மன் காடு பிரதான சாலை ஆகியவற்றில் பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் பழுதடைந்துள்ள சாலைகளில் தார் தளம் மேம்படுத்துதல் பணி | 146.00 | I |
| 2 | மேட்டூர் நகராட்சி ஸ்டேட் பேங்க் குவாட்டர்ஸ் முன் பக்க சாலை,ராஜாஜி நகர் முதல் மற்றும் இரண்டாம் குறுக்கு வீதி , ஆண்டிகவுண்டர் நகர் வடக்கு பக்க தெரு , அம்மன் நகர் தெற்கு பக்க தெரு மற்றும் ராஜ கணபதி நகர் குறுக்கு வீதி, தூக்கணாம்பட்டி ஆர்.டி.ஒ பங்களா பிரதான மற்றும் குறுக்கு வீதிகளில் பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் பழுதடைந்துள்ள சாலைகளில் தார் தளம் மேம்படுத்துதல் பணி | 160.00 | II |
| 3 | மேட்டூர் நகராட்சி டாக்டர்.சுப்பராயன் நகர் குறுக்கு தெரு, சுப்பரமணியார் கோவில் வடக்கு பக்க சாலை காவேரி நகர் குறுக்கு வீதி அப்பு வீடு பின் பக்க தெரு, பி.டபுள்யூ.டி குவாட்டர்ஸ் அருகே மேற்கு பிரதான சாலை முதல் கிழக்கு பிரதான சாலை ஆகியவற்றை இணைக்கும் சாலை , கூலி லைன் டாய்லெட் வடக்கு பக்க தெரு மற்றும் ஆடு வதைக்கும் கூடம் முன் புற சாலை பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் பழுதடைந்துள்ள சாலைகளில் தார் தளம் மேம்படுத்துதல் பணி | 151.00 | III |

| | | | |
|---|---|---|---|
| 4 | மேட்டூர் நகராட்சி மருத்துவமனை காலனி முதல், இரண்டாம் பிராதான சாலை மற்றும் குறுக்கு வீதி,மருத்துவமனை காலனி மேற்கு பக்க வீதி, குமரன் நகர் நகராட்சி பள்ளி முன் பக்க சாலை , பொன்னகர் பிரதான மற்றும் குறுக்க வீதி (திலீபன் நகர்) ஆகியவற்றில் பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் பழுதடைந்துள்ள சாலைகளில் தார் தளம் மேம்படுத்துதல் பணி | 193.00 | IV |
| | **மொத்தம்** | **650.00** | |

**அலுவலக குறிப்பு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. நிர்வாக அனுமதி பெற மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3470/2020/இ1)**

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்
மேட்டூர் நகராட்சி

**தீர்மான எண் 157 நாள் 03.11.2020**

**அனுமதிக்கப்பட்டது**

**<u>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை</u>**
**<u>மேட்டூர் நகராட்சி</u>**

## மேட்டூர் நகராட்சியின் அவசரக் கூட்டம் நகர்மன்றத்தில் நகராட்சியின் தனி அலுவலர் அவர்களால் 23.11.2020 ம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற உள்ளது.

**<u>மன்றப் பொருள்</u>**

**1.** அரசாணை நிலை எண்.101, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, (குப3) நாள்.30.04.1997ல் தெரிவிக்கப்பட்டுள்ள அளவுகோலின்படி கூடுதலாக தேவைப்படும் தூய்மை பணியாளர்களை கீழ்க்கண்டவாறு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**<u>அரசாணை (நிலை) 101–ன் படி தேவைப்படும் மொத்த பணியாளர்களின் கணக்கீடு விபரம்</u>**

| வ. எண் | வேலை வகைப்பாடு | விபரம் | துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | 250 குடியிருப்புகளுக்கு 3 நபர் வீதம் மொத்தம் 12,501 குடியிருப்புகளுக்கு | 12,501 / 250 X 3 | 150 நபர்கள் |
| 2 | பெரிய லாரி 4 நபர் வீதம் | 2 X 4 Nos | 8 நபர்கள் |
| 3 | சிறிய லாரி 3 நபர் வீதம் | 2 X 3 Nos | 6 நபர்கள் |
| 4 | டம்பர் பிளேசர் 2 நபர் வீதம் | 1 X 2 Nos | 2 நபர்கள் |
| 5 | காம்பாக்டர் லாரி 2 நபர் வீதம் | 1 X 2 Nos | 2 நபர்கள் |
| 6 | JCBக்கு 1 நபர் வீதம் | 1 X 1 Nos | 1 நபர்கள் |
| 7 | கழிவு நீர் ஊர்திக்கு 2 நபர் வீதம் | 1 X 2 Nos | 2 நபர்கள் |
| 8 | பேருந்து நிலைய கழிப்பறையை சுத்தம் செய்ய 1 நபர் வீதம் | 1 X 1 Nos | 1 நபர்கள் |
| 9 | பேருந்து நிலையத்தினை சுத்தம் செய்ய C கிரேடு 2 நபர் வீதம் | 1 X 2 Nos | 2 நபர்கள் |
| 10 | 10 லட்சம் வரை வருமானம் வரக்கூடிய நகராட்சி அங்காடியையும் மற்றும் அங்குள்ள கழிப்பறையை சுத்தம் செய்ய கூடுதல் வருமானம் ஒவ்வொரு பத்து இலட்சத்திற்கும் கூடுதல் பணியாளர்கள் 4 நபர் வீதம் | 1 X 4 Nos | 4 நபர்கள் |
| 11 | உரக்கிடங்கு பராமரிப்பு 20 மெட்ரிக் டன் குப்பை சேரும் இடத்திற்கு 2 நபர்கள் வீதம் (மொத்தம் 19.50 டன்கள்) | 1 X 2 Nos | 2 நபர்கள் |
| | **தேவைப்படும் மொத்த பணியாளர்கள்** | | **180 நபர்கள்** |

**<u>அரசாணை 101ன் படி தேவைப்படும் பற்றாக்குறை கூடுதல் பணியாளர்கள் கணக்கீடு விபரம்</u>**

| வ. எண் | விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | அரசாணை( நிலை) எண்.101 , நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.30.04.1997ன் படி தேவைப்படும் மொத்த துப்புரவு பணியாளர்கள் எண்ணிக்கை | 180 நபர்கள் |
| 2 | அனுமதிக்கப்பட்ட நிரந்தர துப்புரவு பணியாளர்களின் பணியிடங்களின் எண்ணிக்கை | 165 நபர்கள் |
| 3 | தற்போது பணியில் உள்ள நிரந்தர துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை | 71 நபர்கள் |

| | | |
|---|---|---|
| 4 | தனியார் ஒப்பந்த துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.32976/ஜ3/2018 நாள்.08.07.2019 | 52 நபர்கள் |
| 5 | பணியில் உள்ள மொத்த துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை (தனியார் மற்றும் நிரந்தரம்) (71 + 52) | 123 நபர்கள் |
| 6 | கூடுதலாக தேவைப்படும் துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை (180–123) | 57 நபர்கள் |

திடக்கழிவு மேலாண்மை பணிகளை திறம்பட செய்வதற்கு (47+52=99) 99 ஒப்பந்த தூய்மை பணியாளர்கள் தனியார் மூலம் பணி செய்து வந்தனர். தற்போது 47 பணியாளர்களுக்கு பெறப்பட்ட மூன்றாண்டு ஒப்பந்த காலம் 31.12.2020 உடன் முடிவடைவதால், பொது சுகாதார பணிகளின் அவசர அவசியம் கருதி அரசாணை 101ன்படி தேவைப்படும் கூடுதல் தூய்மை பணியாளர்கள் 57 நபர்களை சேர்த்து (52+57=109) தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் (Out sourcing) நியமித்துக்கொள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்கநர், சேலம் அவர்களின் மூலமாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெற கருத்துரு தயார் செய்து அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. பொது சுகாதாரம் மற்றும் தூய்மை இந்தியா திட்டத்தின் நோக்கங்களை கருத்தில் கொண்டு மன்றம் அனுமதிக்கலாம்.
2. ஏற்படும் செலவினத்தினை நகராட்சி திடக்கழிவு மேலாண்மை பயனீட்டாளர் கட்டண நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்

**(ந.க.எண்.3591/2020/எச்1)**

## தீர்மான எண் 158 நாள் 23.11.2020

## அனுமதிக்கப்பட்டது

**2.** இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பணியாற்றி வரும் தூய்மைப்பணியாளர்களுக்கு 2020-2021 ஆம் ஆண்டிற்கு சீருடைகள் மற்றும் காலணிகள் வாங்கி வழங்க வேண்டும். ஆண் தூய்மைப்பணியாளர்கள் 38 நபர்கள், பெண் தூய்மை பணியாளர்கள் 33 நபர்களுக்கு சீருடைகளை அரசு சார்பு நிறுவனமாகிய கோ-ஆப் டெக்ஸ் அவர்களிடம் நேரடியாக வாங்கி வழங்கவும், அதற்காகும் உத்தேச செலவு தொகை ரூ.3.50 இலட்சத்திற்கும், ஆண் தூய்மைப்பணியாளர்கள் 38 நபர்கள், பெண் தூய்மை பணியாளர்கள் 33 நபர்களுக்கு ஒரு ஜோடி காலணிகளும், ஓட்டுநர்கள் 6 நபர்களுக்கு ஒரு ஜோடி கட் ஷூக்களும் ஈரோடு சர்வோதய சங்கம், மேட்டூர் அவர்களிடம் நேரடியாக வாங்கி வழங்கவும், அதற்காகும் உத்தேச செலவு தொகை ரூ.1.50 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத் தொகையினை வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2500/2020/எச்1)**

## தீர்மான எண் 159 நாள் 23.11.2020

## அனுமதிக்கப்பட்டது

**3**. மேட்டூர் நகராட்சியில் நிரந்தர தட்டச்சு பணியிடத்தில் பணிபுரிந்த பணியாளர் கடந்த 2008ம் ஆண்டில் பணியிட மாறுதலில் சென்று விட்டதால் மேற்கண்ட பணியிடம் காலியாக உள்ளது. இந்நகராட்சி தேர்வு நிலை நகராட்சி என்பதால் கணினி தட்டச்சு பணி மிகவும் அத்தியாவசியமாக இருப்பதாலும் அரசு அலுவலகங்களிலிருந்து பெறக்கூடிய தபால்களுக்கு உடனுக்கு உடன் பதில் அனுப்ப வேண்டி இருப்பதாலும் தட்டச்சு பணியிடத்தில் நிரந்தர பணியாளறை பூர்த்தி செய்யும் வரை, மாவட்ட ஆட்சித் தலைவர் சேலம் அவர்களின் மாவட்ட அரசிழழ் எண்.11ல் 2020-2021ம் ஆண்டிற்கு தட்டச்சு பணிக்கு நாள் ஒன்றிற்கு ரூ.611/- விலை விகிதப் படியலில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தொகையின் அடிப்படையில் உள்ளூர் கம்ப்யூட்டர் பயிற்சி நிறுவனத்திடம் ஒரு நபருக்கு தட்டச்சுப்பணிக்கான விலைப்புள்ளி கோரி அதற்கான செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. **மன்றத்தின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்**
2. **வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்**

**(ந.க.எண்.4563/2012/ சி1)**

**தீர்மான எண் 160 நாள் 23.11.2020**

## அனுமதிக்கப்பட்டது

**4.** பொது சுகாதாரம் நகராட்சிக்குட்பட்ட அனைத்து தெருக்களில் இருபுறமும் வளர்ந்துள்ள புல் செடிகளை சுத்தம் செய்யப்படும் பணிக்கு 2 எண்ணிக்கை புல் வெட்டும் இயந்திரம் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த இரண்டு இயந்திரமும் கொள்முதல் செய்யப்பட்ட நாட்களிலிருந்து எந்த ஒரு பழுது பணிகளும் மேற்கொள்ளப்படாத நிலையில் தற்பொழுது 2 இயந்திரமும் பழுது ஏற்பட்டு இயக்க முடியாத நிலையில் உள்ளது. இதனால் பொது மக்களிடமிருந்து புல் செடிகளை சரி செய்து தருமாறு பல்வேறு கோரிக்கைகள் வரப்பெற்று வருகின்றது. எனவே மேற்காணும் இரண்டு இயந்திரத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்யவும், பழுதான பொருட்களுக்கு புதிய பொருட்கள் பொருத்தவும் மற்றும் ஆயில் சர்வீஸ், பிளேடுகள், ஒயர்கள் போன்றவைகள் தேவையான அளவில் வாங்கி கொள்ளவும், தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு கொள்முதல் ரூ 32,500/- ஆகும் என்பதனையும், அதற்காக ஆகும் செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொது சுகாதாரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தெருக்களில் இருபுறமும் வளர்ந்துள்ள புல் செடிகளை 2 புல் வெட்டும் இயந்திரம் மூலம் வெட்டி சுத்தம் செய்யப்பட்டு வரப்படுகின்றது. தற்பொழுது 2 இயந்திரம் பழுதாகி பொது சுகாதார பணிக்கு பயன்படுத்த முடியாத சூழ்நிலையில் உள்ளதாலும், இரண்டு இயந்திரத்தில் உள்ள பழுதுகளை சரி செய்யவும், பழுதான பொருட்களுக்கு புதிய பொருட்களை பொருத்தவும், மற்றும் வயர், பிளோடு போன்றவை வாங்கவும், தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகையான ரூ.32,500/- க்குள் செலவினம் மேற்கொள்ளவும், இப்பணி அத்தியாவசியப் பணியாக உள்ளதால் பொது சுகாதாரம் அவசரம் அவசிய கருதி தனி அலுவலரின் முன் அனுமதியின் பேரில் மேற்காணும் பணிக்கு விலைப்புள்ளிகள் கோருவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3125/2020/எச்1)**

**தீர்மான எண் 161 நாள் 23.11.2020**

## அனுமதிக்கப்பட்டது

**5.** நகராட்சிக்குட்பட்ட தெருக்களில் வளர்ந்துள்ள புல் செடிகளை புல் வெட்டும் இயந்திரம் இரண்டும் பழுதாகி விட்டதால் மேற்காணும் இயந்திரத்தில் உள்ள பழுதுகளை சரி செய்யவும்,

பழுதான பொருட்களுக்கு புதிய பொருட்கள் பொருத்தவும், ஆயில் சர்வீஸ் செய்து நல்ல முறையில் மேற்கொள்ளவும் 02.11.2020-ந் தேதி விலைப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டது. அவ்வாறு விலைப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டதில் கீழ்கண்ட மூன்று நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அவற்றின் விவரம்.

| வ.எண் | விலைப்புள்ளிகள் வரப்பெற்ற நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளிகள் தொகை ரூ.பை. | சதவிகிதம் |
|---|---|---|---|
| 01 | M/s.R.M.H. கார்ப்பரேஷன் ஏஜென்ஸிஸ், P.B.No.303, 52-WB ரோடு, திருச்சிராப்பள்ளி. | ரூ. 31541/- | அதிகம் |
| 02 | M/s.K.G.M டீசல் & எலக்ட்ரிக்கல்ஸ், 64, பெருந்துறை ரோடு எதிரில், ஈரோடு. | ரூ. 32084/- | அதிகம் |
| 03 | M/s.K.G.M டீசல் & எலக்ட்ரிக்கல்ஸ், 551/318-A,ஸ்டேட் பேங்க் காலனி, சேலம். | ரூ. 30665/- | குறைவு |

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. பொது சுகாதாரம், புல் வெட்டும் இயந்திரத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை செய்து வழங்க வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் உள்ள வரிசை எண். 3–ல் காணும் M/s.K.G.M டீசல் & எலக்ட்ரிக்கல்ஸ்,551/318-A,ஸ்டேட் பேங்க் காலனி, சேலம் என்ற நிறுவனம் குறைந்த விலைப்புள்ளியினை வழங்கியுள்ளது. எனவே குறைந்த விலைப்புள்ளியினை வழங்கிய நிறுவனத்திற்கு, பொது சுகாதாரம் அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியின் பேரில் பணி உத்திரவு வழங்கப்பட்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3125/2020/எச்1)**

**தீர்மான எண் 162 நாள் 23.11.2020**

## அனுமதிக்கப்பட்டது

**6.** இந்நகராட்சியில் கொரோனா தடுப்பு பணிக்காக, த/நா குடிநீர் வடிகால் வாரியத்தின் பராமரிப்பில் உள்ள பாதாள சாக்கடை திட்ட Jetrod machine TN 93 A 2362–ஐ நகராட்சிக்குட்பட்ட பகுதியில் கிருமி நாசினி தெளிக்க 23.03.2020 முதல் 30.05.2020 வரை பயன்படுத்தப்பட்டு 01.06.2020ல் நகராட்சியில் இருந்து குடிநீர் வடிகால் வாரியத்திற்கு வழங்கப்பட்ட பொழுது வாகனத்தின் Jetting Pressor Hose, Hydraulic Pressure Pump மற்றும் flow control valve போன்ற பழுதுகள் உள்ளது என தெரிவிக்கப்பட்டது. வாகனத்தில் உள்ள பழுதுகளை சரிசெய்ய உத்தேச செலவினம் ரூ.1,64,000/– மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.1232/2020/இ1)**

**தீர்மான எண் 163 நாள் 23.11.2020**

## அனுமதிக்கப்பட்டது

**7.** இந்நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவில் குப்பை எடுக்க பயன்படுத்தப்பட்டு வரும் Battery Operated Vehicle (BOV)ன் AMC காலம் முடிவடிந்துவிட்டதால், வண்டியில் ஏற்படும் பழுதுகளை சரி செய்ய உத்தேச செலவினம் ரூ.**3.10** இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. நகராட்சி வருவாய் நிதியிலிருந்து பணியை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3124/2020/எச்1)**

**தீர்மான எண் 164 நாள் 23.11.2020**

**அனுமதிக்கப்பட்டது**

**8.** இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்தப்பட்டு வரும் வாகனம் எண்.TN52W4660, **65,000** கி.மி ஓடியுள்ளதால் வாகனத்திற்கு 4டயர் மாற்றி வீல் அலைன்மென்ட் பேலன்ஸ் செய்வதற்கு உத்தேச செலவினம் ரூ.**40,000/–** ஆகும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. நகராட்சி வருவாய் நிதியிலிருந்து பணியை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3581/2020/இ1)**

**தீர்மான எண் 165 நாள் 23.11.2020**

**அனுமதிக்கப்பட்டது**

**9.** மேட்டூர் நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவிற்கு குப்பை எடுக்கப் பயன்படுத்தப்பட்டு வரும் வாகனம் எண்.TN 52 B **2041–**ன் தகுதிச்சான்று **24.10.2020**ம் தேதியுடன் முடிவடைவதால் வாகனத்தின் தகுதிச்சான்றை புதுப்பித்து வாகனத்தில் உள்ள பழுதுகளை சரிசெய்து தர உத்தேச செலவினம் ரூ.**1,22,000/–** ஆகும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. நகராட்சி வருவாய் நிதியிலிருந்து பணியை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2880/2020/எச்1)**

**தீர்மான எண் 166 நாள் 23.11.2020**

**அனுமதிக்கப்பட்டது**

**10.** மேட்டூர் நகராட்சி சேலம் கேம்ப் பகுதியில் உள்ள பழைய முதலாவது திட்டத்தின் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் (Water Treatment Plant, clear water resewoir இரு நீர்தேக்க தொட்டிகள், ஒரு மேல்நிலை நீர்தேக்க தொட்டி இரு நீருந்து நிலையங்கள் ஆகிவற்றின் பராமரிக்க தனியார் மூலம் (Out sourcing) பணி ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு,

விளம்பரம் செய்தமைக்கு Accord Advertising Agencies, பட்டியல் எண். AAA/0576/19–20 நாள்.11.01.2020 ரூ.74183/– வரப்பெற்றுள்ளது. ரூ.74183/–ஐ வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.914/2019/இ1)**

**தீர்மான எண் 167 நாள் 23.11.2020**

**அனுமதிக்கப்பட்டது**

**11.** தமிழ்நாடு நகர்புர சாலை மேம்பாட்டு திட்டம் (TURIP 2019–20) நிதியின் பணிகள் மேற்கொள்ள ரூ.500.00 இலட்சம் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் செய்தமைக்கு Accord Advertising Angencies பட்டியல் எண்.AAA/0349/19–20 நாள்.23.10.2019 ரூ.73238/– வரப்பெற்றுள்ளது. ரூ.73238/–ஐ வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2338/2019/இ1)**

**தீர்மான எண் 168 நாள் 23.11.2020**

**அனுமதிக்கப்பட்டது**

**12.** இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் 73.08 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு தற்போது பயன்பாட்டில் இருந்து வருகிறது. இத்திட்டத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் வீடுகளுக்கு பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்குவதற்கு ஏதுவாக அனைத்து வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு ஆள் நுழைவு கிணற்றிலிலிந்து (Man holes) கட்டிடங்களின் மதில் சுவர் வரை குழாய் பதிக்கப்பட்டுள்ளது. தற்போது வீடுகளுக்கு பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்க 6.90 கோடி மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு 10,000/– எண்ணிக்கையிலான வீடுகளுக்கு வீட்டு இணைப்புகள் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தில் இந்நகராட்சியின் வார்டு எண்.23ல் கூலிலைன் பகுதியில் உள்ள சுமார் 500 வீடுகள் பயன்பெறும் வகையில் பாதாள சாக்கடை Level permit ஆகும்படி புதிய பகிர்மான குழாய் அமைத்தற்கு ரூ.490000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்
3. பணியின் அவசர அவசியம் கருதி மன்ற முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.3046/2020/இ1)**

**தீர்மான எண் 169 நாள் 23.11.2020**

**அனுமதிக்கப்பட்டது**

**13.** மேட்டூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புரட்சித்தலைவி அம்மா விரிவான விபத்து மற்றும் ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களின் கூடுதல் விபரங்களை கணக்கெடுப்பதற்கு அரசு ஆணை(நிலை) எண்.170 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ம.அ.தி3) துறை நாள்.27.10.2020ன்படி ஒரு குடும்பத்திற்கு ரூ.15/– வீதம் (ரூபாய் பதினைந்து

செலவு என்ற அடிப்படையில் (இதில் படிவம் அச்சிடுதல் (prepopulated form) ரூ.5/– தகவல் சேகரிப்பு பணி ரூ.5/– தகவல்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்தல் ரூ.5) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இச்செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

**2235** சமூகப் பாதுகாப்பு நலனும் **02**, சமூக நலன் **103**, மகளிர் நலன், மாநிலச் செலவினங்கள் LC தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு திட்டம் (மகளிர் திட்டம் ) **309** உதவித்தொகை **03** குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை

( DPC 2235–02–103–LC –30903)

Tipps (Tamil Nadu Integrated Poverty Portal Services) (தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்) என்ற இணையதளத்தில் **5598** படிவங்கள் பெறப்பட்டு **100** சதவீதம் கணக்கெடுப்பு முடிக்கப்பட்டு **4782** படிவங்கள்இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. **(85.42%)** தற்போது **5598X15=83970/–** தொகையை பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மேற்படி நிதி அரசிடமிருந்து கிடைக்கப்பெற்றவுடன் பொது நிதிக்கு மாற்றம் செய்துக்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.594/2020/அ3)**

**தீர்மான எண் 170 நாள் 23.11.2020**

## அனுமதிக்கப்பட்டது

**14.** இந்நகராட்சி பணிக்காக பயன்படுத்தப்பட்டு வரும் பேக்கோ லோடர் TN 27 S 2293 JCB வாகனத்தின் இன்ஜீன் பழுதாகியுள்ளதால் பழுதுகளை சரிசெய்ய உத்தேச செலவினம் ரூ.1,23,800/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3608/2019/இ1)**

**தீர்மான எண் 171 நாள் 23.11.2020**

## அனுமதிக்கப்பட்டது

**15.** 2019–2020 ஆம் நிதியாண்டிற்கான ஆண்டுக் கணக்கினை புதிதாக உருவாக்கப்பட்ட CWBS மென்பொருளில் தயார் செய்து தணிக்கைக்கு சமர்ப்பித்திடும் பொருட்டு, ஏற்கனவே இந்நகராட்சியின் ஆண்டுக் கணக்கினை கணினியில் தயார் செய்து தணிக்கைத் துறைக்கு சமர்பித்த திரு.மு.அம்பேத்கார் என்பவரையே **2019–2020** ஆம் நிதியாண்டிற்கும் நியமித்துக் கொள்ளவும், அதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.**80,000/–**க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.3458/2020/பி1)**

**தீர்மான எண் 172 நாள் 23.11.2020**

## அனுமதிக்கப்பட்டது

**16.** கொரோனா (கோவிட்–19) காரணங்களினால் தமிழ்நாடு முழுவதும் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்ட நிலையில், நகராட்சி பகுதிகளில் 2020-2021 ஆம் நிதியாண்டில் குத்தகை இனங்களான சைக்கிள் / கார் ஸ்டேண்ட், வாரச்சந்தை மற்றும் தினசரி மார்க்கெட், கடைகள் மற்றும் ஸ்டால்கள் ஆகியவை கடந்த 01.04.2020 முதல் 31.05.2020 வரை இரண்டு மாதங்களாக மூடப்பட்டிருந்ததால், மேற்படி இனங்களுக்கு உரிமத் தொகை மற்றும் வாடகைத் தொகையை செலுத்துவதிலிருந்து மேற்கூறிய இரண்டு மாதங்களுக்கு விலக்களிக்கப்பட்டு அரசாணை எண்.298, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.02.09.2020 ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

மேற்படி கடைகளில் 31.03.2020 உடன் 9 ஆண்டுகள் உரிமம் முடிவடைந்த கடைகள் மற்றும் 31.03.2020 உடன் மூன்றாண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு ஏற்கனவே இருந்த பழைய வாடகைத் தொகையை தள்ளுபடி செய்ய நகர்மன்றத் தீர்மானம் எண்.145, நாள்.25.09.2020ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. தற்போது 01.04.2020 முதல் புதிதாக உயர்வு செய்யப்பட்ட வாடகைத் தொகையில், மேற்படி 01.04.2020 முதல் 31.05.2020 முடிய உள்ள பழைய மற்றும் புதிய வாடகைத் தொகைக்கான வாடகை வித்தியாசத் தொகையை கீழ்க்காணும் விவரப்படி தள்ளுபடி செய்ய மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>கடைகள்</u>

| வ. எண். | வரிவிதிப்பு எண் | வரிவிதிப்பாளர் பெயர் மற்றும் கடை அமைந்துள்ள விபரம் | | மாத வாடகை | அரசு ஆணையின் படி நகராட்சி நிர்வாகத்தால் தள்ளுபடி செய்ய பரிந்துரைக்கும் காலம் மற்றும் பழைய மற்றும் புதிய வாடகைக்கான வித்தியாசத் தொகை | |
|---|---|---|---|---|---|---|
| | | பெயர் | விவரம் | | மாதம் | தொகை |
| 1 | 2 | 3(1) | 3(2) | 4 | 5 | 6 |
| 1 | 047/121 | A.J. ABDUL FAZZIL | DAILY MARKET-MUDF-SHOP NO.5 | 8630 | 4/2020, 5/2020 | 2260 |
| 2 | 047/150 | K. MEENAMBAL | R.S.IDSMT SHOP NO.1 | 4830 | 4/2020, 5/2020 | 1260 |
| 3 | 047/158 | T. MAYILSAMY | R.S.IDSMT SHOP NO.9 | 4830 | 4/2020, 5/2020 | 1260 |
| 4 | 047/159 | T. MAYILSAMY | R.S.IDSMT SHOP NO.10 | 4830 | 4/2020, 5/2020 | 1260 |
| 5 | 047/162 | U. THATHEYU S/O ULAGANATHAN | R.S.IDSMT SHOP NO.13 | 4830 | 4/2020, 5/2020 | 1260 |
| 6 | 047/165 | A. PASUPATHIESWARAN | R.S.IDSMT SHOP NO.16 | 4830 | 4/2020, 5/2020 | 1260 |
| 7 | 047/167 | B. MANGALRAJ | R.S.IDSMT SHOP NO.18 | 4830 | 4/2020, 5/2020 | 1260 |
| 8 | 047/168 | S. VIJAYARAJ | R.S.IDSMT SHOP NO.19 | 4830 | 4/2020, 5/2020 | 1260 |
| 9 | 047/171 | K. BALATHANDAYUTHAM | R.S.IDSMT SHOP NO.22 | 4830 | 4/2020, 5/2020 | 1260 |
| 10 | 047/172 | N.R. ROOPA PRIYA | R.S.IDSMT SHOP NO.23 | 4830 | 4/2020, 5/2020 | 1260 |
| 11 | 047/174 | M.N. SUGUMAR | R.S.IDSMT SHOP NO.25 | 4830 | 4/2020, 5/2020 | 1260 |
| 12 | 047/175 | M. SAGAPUDEEN | R.S.IDSMT SHOP NO.26 | 4830 | 4/2020, 5/2020 | 1260 |
| 13 | 047/178 | M. ASRAF, | R.S.IDSMT SHOP NO.29 | 4830 | 4/2020, 5/2020 | 1260 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 14 | 047/195 | M.BAKKIYAM / MAHENDIRAN | IDSMT DAILY MARKET SOUTH SIDE SHOP-15 | 4000 | 4/2020, 5/2020 | 2416 |
| 15 | 047/206 | P.VELMURUGAN / PONNUSAMY | IDSMT DAILY MARKET SOUTHSIDE SHOP-26 | 4000 | 4/2020, 5/2020 | 3872 |
| 16 | 047/BD01/00019 | L S HARISH | IDSMT- NORTH SIDE SHOP NO.4 | 1280 | 4/2020, 5/2020 | 336 |
| 17 | 047/SC03/00001 | ESWARI R | IDSMT- NORTH SIDE SHOP NO 5 | 1340 | 4/2020, 5/2020 | 356 |
| 18 | 047/SC03/00004 | VIJAYA | IDSMT- NORTH SIDE SHOP NO 6 | 1360 | 4/2020, 5/2020 | 356 |
| 19 | 047/SC03/00002 | KAMATCHI | IDSMT- NORTH SIDE SHOP NO 7 | 1220 | 4/2020, 5/2020 | 332 |
| 20 | 047/SC03/00005 | KANNUSAMY | IDSMT- NORTH SIDE SHOP NO 8 | 1250 | 4/2020, 5/2020 | 328 |
| 21 | 047/2011100 | M.KANNAN | IUDP SHOP NO 33 | 3450 | 4/2020, 5/2020 | 900 |

**மொத்தம்** **26,276.00**

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3458/2020/அ2)**

**தீர்மான எண் 173 நாள் 23.11.2020**

**அனுமதிக்கப்பட்டது**

**ஆணையாளர் (ம) தனி அலுவலர்,**
**மேட்டூர் நகராட்சி.**